# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 14.05.2026

## முன்னிலை

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8764/F/2025 & SA 8763/F/2025**

திரு.K.சுப்ரமணி -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியரகம்,
கிருஷ்ணகிரி - 635 115.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 14.05.2026 முற்பகல் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.K.சுப்ரமணி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர், திரு.சி.கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**வழக்கு எண். SA 8764/F/2025:-**

மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 22.10.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் அவர்களுக்கு தாக்கல் செய்துள்ள மனுவில் ***"கிருஷ்ணகிரி வட்டம், குந்தாரப்பள்ளி கிராமம் கீழ்கண்ட (UDR) நில உடைமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முந்தைய சர்வே எண் மற்றும் பைமாஷ் எண்களுக்குரிய OSR-RSR-SLR-FMB-'A' Register ஆவணங்கள் நகல்கள்"*** என்பன போன்ற 3 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி வட்டம்,

கிருஷ்ணகிரி அவர்கள் ஓ.மு.29388/2024/ஜே4, 05.11.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர், ஆராய்ச்சி அலுவலர், தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

4. மேலும், அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர், ஆராய்ச்சி அலுவலர், தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர் அவர்கள் கடித எண்.8322/S9/2024, 18.12.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனினும் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாததால் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)-ன் கீழ் 24.01.2025 தேதியிட்ட தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் மூ.மு.24060/2025/ஜே4, 18.08.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களிடமிருந்து முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாததால் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(3)-ன் கீழ் 03.06.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் மனுதாரரின் இதே பொருள் தொடர்பான கீழ்க்கண்ட வழக்கும் ஒரு சேர இன்று (14.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**II. வழக்கு எண். SA 8763/F/2025:-**

மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 22.10.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் அவர்களுக்கு தாக்கல் செய்துள்ள மனுவில் ***“கிருஷ்ணகிரி வட்டம், குந்தாரப்பள்ளி கிராமம் கீழ்கண்ட (UDR) நில உடைமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முந்தைய சர்வே எண் மற்றும் பைமாஷ் எண்களுக்குரிய OSR-RSR-SLR-FMB-‘A’ Register ஆவணங்கள் நகல்கள்”*** என்பன போன்ற 3 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 22.10.2024 தேதியிட்ட மனுவிற்கு மூ.மு.24060/2025/ஜே4, 15.10.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மீண்டும் இனம் வாரியான தகவல்களை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் **பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத்தகவல் அலுவலரால்** வழங்கப்பட்டுள்ள **தகவல்கள் போதுமானது என கருதுகிறது.** மேலும், உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய மேல் முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரரின் 24.01.2025 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் கீழான மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை பெற்று 19.06.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.** SA 8764/F/2025 & SA 8763/F/2025

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக
   உதவியாளர் (பொ),
   மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி - 635 115.

2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திரு.சுப்ரமணி,
எண்.441, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் - 635 601.

**<u>நகல்</u>**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA
21.05.2026